**தலைப்பு 268 – கிளிநொச்சி மாவட்டச் செயலகம்/ கச்சேரி தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2016 ஆம் ஆண்டு**

தலைப்பு 268 – கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றினை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2017 ஒக்தோபர் 23 ஆம் திகதி மாவட்டச் செயலாளரிற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வினதும், கொடுக்கல்வாங்கல்கள் மாதிரிகளின் செவ்வை பார்த்தலினதும் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக்கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்**

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகளிலுள்ள ஏற்பாடுகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் திட்டமிடுதல், அமுல்படுத்துதல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**2. கணக்குகள்**

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**(அ) மொத்த நிதியேற்பாடும் செலவினமும்**

மாவட்டச் செயலகத்திற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த மொத்த தேறிய நிதியேற்பாடு ரூபா 298.30 மில்லியன் தொகையானதுடன் அதில் மீளாய்வாண்டின் இறுதிவரையில் ரூபா 293.79 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க, மாவட்டச் செயலகத்தின் மொத்த தேறிய நிதியேற்பாடுகளிலிருந்தான சேமிப்புக்கள் ரூபா 4.51 மில்லியன் தொகையாக அல்லது 1.51 சதவீதமாக இருந்தது. விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| செலவினம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய நிதியேற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டெழுபவை | 190.30 | 187.39 | 2.91 | 1.53 |

| | | | | |
|---|---|---|---|---|
| மூலதனம் | 108.00 | 106.40 | 1.60 | 1.48 |
| | ---------- | ---------- | ------- | |
| **மொத்தம்** | **298.30** | **293.79** | **4.51** | **1.51** |
| | ====== | ====== | ==== | |

**(ஆ) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் மூலம் கிடைக்கப்பெற்ற நிதி ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல்**

மீளாய்வாண்டின் போது பல்வேறு நடவடிக்கைகளிற்காக 19 அமைச்சுக்கள் மற்றும் 11 திணைக்களங்களிடமிருந்து ரூபா 1,993.20 மில்லியன் கூட்டுமொத்தமான நிதியேற்பாடுகள் பெறப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 1,936.70 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க, நிதியேற்பாடுகளிலிருந்தான சேமிப்பு ரூபா 56.50 மில்லியன் தொகையாக அல்லது 2.83 சதவீமாக இருந்தது.

## 2.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட எல்லைகள்**

26801 ஆம் விடய இலக்கத்தின் கீழ் மாவட்டச் செயலகத்தின் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான தொகைகள் கீழே தரப்படுகின்றன.

| **செலவினம்** | | **பெறுவனவுகள்** | | **வரவு மீதி** | |
|---|---|---|---|---|---|
| **ஆகக்கூடிய எல்லை** | **உள்ளபடியானது** | **ஆகக்குறைந்த எல்லை** | **உள்ளபடியானது** | **ஆகக்கூடிய எல்லை** | **உள்ளபடியானது** |
| **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** |
| 10.50 | 10.43 | 8.50 | 12.47 | 42.00 | 35.66 |

## 2.3 பொது வைப்புக் கணக்கு

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான 06 வைப்புக் கணக்கு மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 37,125,771 ஆகும். விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| **வைப்புக் கணக்கு இலக்கம்** | **2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி** |
|---|---|
| | **ரூபா** |
| 6000/0000/00/0002/0116/000 | 5,000 |
| 6000/0000/00/0013/0076/000 | 216,523 |
| 6000/0000/00/0016/0064/000 | 21,793,206 |
| 6000/0000/00/0017/0019/000 | 2,301,030 |

| | |
|---|---|
| 6000/0000/00/0018/0076/000 | 108,355 |
| 6000/0000/00/0020/0010/000 | 12,701,657 |
| | --------------- |
| **மொத்தம்** | **37,125,771** |
| | ========= |

## 2.4 கணக்காய்வு அவதானிப்பு

2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்படி 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் காண்பிக்கப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்களிற்குட்பட்டு திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 3.1 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

பின்வரும் பதிவேடுகள் முறையாக பேணப்பட்டு நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

| பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணங்கள் |
|---|---|
| இழப்புக்கள் பதிவேடு | நிதிப்பிரமாணம் 110 |
| நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |

### 3.2 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### 3.2.1 பாதீட்டு முரண்

செயல்நிமித்த அடிப்படையில் வருடாந்த மதிப்பீட்டை தயாரிப்பதன் காரணமாக இரண்டு மூலதன செலவின விடயங்கள் மற்றும் மூன்று மீண்டெழும் செலவின விடயங்கள் தொடர்பான ரூபா 713,934 தேறிய சேமிப்புக்களிற்காக கொடுக்கப்பட்ட விளக்கங்கள் கணக்காய்வில் திருப்திகரமாக ஏற்றுக்கொள்ளப்பட முடியாதிருந்தன.

### 3.3 கட்டுநிதிக் கணக்கு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 7002/0000/00/0286/0016/000 ஆம் இலக்க கட்டுநிதிக் கணக்கின் செலவிடப்படாத ரூபா 48,919,365 மீதி உரிய நோக்கங்களிற்காக பயன்படுத்தப்படாமல் மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகத்தினால் தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்தன.

(ஆ) வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்காத போதிலும் ரூபா 13,757,468 கூட்டுத்தொகையான 03 காசோலைகள் 02 ஒப்பந்ததாரர்களின் பெயரில் வரையப்பட்டு கட்டுநிதி மீதி பொதுத் திறைசேரிக்கு அனுப்பப்படாமல் செயலகங்களில் நிறுத்திவைக்கப்பட்டிருந்ததுடன் பத்து மாதங்களிற்கு மேலாக 2017 ஒக்தோபர் 31 வரையிலும் சமர்ப்பிக்கப்படாத காசோலைகளாக காட்டப்பட்டிருந்தன.

**3.4 அரசாங்க உத்தியோகத்தர்களிற்கான முற்பணக் கணக்கு**

26801 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களிற்கான முற்பணக் கணக்கு தொடர்பாக 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றின் மீது மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின் போது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம் பதவி வறிதாக்கப்பட்ட இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து பெறவேண்டிய ரூபா 610,595 கூட்டுத்தொகையான நிலுவைக் கடன் மீதிகளை அறவிடுவதற்காக 04 ஆண்டுகள் தொடக்கம் 05 ஆண்டுகள் வரையான காலவீச்சில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது.

**3.5 இணங்காமைகள்**

**நிதிப் பிரமாணங்களுடனான இணங்காமை**

நெல் கொள்வனவிற்காக கூட்டுறவுச் சங்கங்களிற்கு செலுத்தப்பட்ட ரூபா 7,050,000 கூட்டுத்தொகையான வேலை ஆரம்பிப்பு முற்பணங்கள் மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு 2 ஆண்டுகள் தொடக்கம் 4 ஆண்டுகள் வரையான காலவீச்சிற்கு மேலாக அச் சங்கங்களால் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், மாவட்டச் செயலாளரால் இது தொடர்பாக நிதிப் பிரமாணம் 371 இன் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.6 உள்நாட்டு நிதியீட்டத்தின் கீழ் செயற்திட்டங்களை அமுல்ப்படுத்துதல்**

கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின் போது வெளிப்படுத்தப்பட்ட ஆரம்பிக்காது கைவிடப்பட்ட செயற்திட்டங்கள் மற்றும் செயற்திட்டத்தின் பூர்த்தியாக்கலிலுள்ள தாமதங்கள் என்பவற்றின் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

**செயற்திட்டங்களை நிறைவேற்றுவதிலுள்ள தாமதங்கள்**

உள்ளூர் ரீதியாக இடம்பெயர்ந்த குடும்பங்கள் மற்றும் அகதிகளிற்காக அறிமுகப்படுத்தப்பட்ட வாழ்வாதார உதவி செயற்திட்டத்தை அமுல்ப்படுத்துவதில் ஏற்றுக்கொள்ளமுடியாத காலதாமதங்கள் அவதானிக்கப்பட்டன. இதன் விளைவாக முன்னாள் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சால் வழங்கப்பட்ட 2016 பெப்ரவரி 09 ஆம் திகதிய எம்ஆர்/4/31 ஆம் இலக்க கடிதத்தில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளின் பிரகாரம் அப் பயனாளிகளிற்கு மாடு மற்றும் ஆடுகளை வழங்குவதற்குப் பதிலாக ரூபா 40,052,000 தொகை 2016 திசெம்பர் 31 இல் பயனாளிகளின் வங்கிக் கணக்குகளிற்கு மாற்றப்பட்டிருந்தன.

**3.7 சர்ச்சைத் தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பிரதேச செயலக செயற்திட்ட வேலைகளின் பொதி 8 (சுற்றுமதில், தோண்டப்பட்ட கிணறு, மதகு போன்றவற்றின் நிர்மாணம்) ஐ அமுல்ப்படுத்துவதற்காக பெறுகைக் குழுவால் மேற்கொள்ளப்பட்ட பெறுகைத் தீர்மானத்திற்கு முரணாக இரண்டாவது ஆகக் குறைந்த கேள்வியாளரிற்கு ஒப்பந்தமொன்று வழங்கப்பட்டிருந்தது. மேலும் இரண்டாவது ஆகக் குறைந்த கேள்வியாளரிற்கு ஒப்பந்தத்தை வழங்கியதற்கான காரணமெதுவும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பொதி 01 (உலர் கட்டில், சனசமூக நிலையம், தோண்டப்பட்ட கிணறு போன்றவற்றின் நிர்மாணம்) ஐ மதிப்பீடு செய்யும் போது கேள்விப் படிவத்தில் 10% கழிவு குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு மாற்றம் செய்யப்பட்ட கழிவு விலையை கருத்தில் கொண்டிருந்தது. இதன் விளைவாக ரூபா 318,930 நட்டமொன்று அரசாங்கத்திற்கு ஏற்பட்டிருந்தது.

(இ) மேற்படி கேள்விகள் மூலப் பிரதிகள் மற்றும் நகல் பிரதிகளாக தனித்தனியாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் கேள்விகளின் அனைத்து நகல் பிரதிகளும் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 6 ஆம் அத்தியாயத்தின் 3.4(அ) உப பிரிவிற்கு முரணாக ஒரே நேரத்தில் திறக்கப்பட்டிருந்தன.

(ஈ) மீளாய்வாண்டின் போது அமுல்ப்படுத்தப்பட்ட பன்முகப்படுத்தப்பட்ட மூலதன வரவுசெலவுத் திட்டம் மற்றும் கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் வழங்கப்பட்ட ஒப்பந்தங்களின் உள்ளபடியான பெறுமதியை கருத்தில் கொள்ளாமல் பெறுமதி சேர் வரிக் கொடுப்பவுகளிற்காக ரூபா 1,258,578 மேலதிக நிதியேற்பாடுகளை கோரி 2016 ஆகஸ்ட் 10 இல் பொதுத் திறைசேரிக்கு வேண்டுகோளொன்றை கரைச்சி பிரதேச செயலகம் மேற்கொண்டிருந்தது. அதன் விளைவாக 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 2,681,111 சேமிப்பு ஏற்பட்டிருந்தது. அதேநேரம் பிரதேச செயலகம் தேவையான அங்கீகாரங்களை பெற்றுக்கொள்ளாமல் இச் சேமிப்புக்களை பயன்படுத்தி ஏழு நிர்மாண வேலைகளை அமுல்ப்படுத்தியிருந்தது.

### 3.8 மேலதிகக் கொடுப்பனவுகள்

பல்வேறு ஒப்பந்ததாரர்களால் சமர்ப்பிக்கப்பட்ட விலைப்பட்டியல்களில் குறிப்பிடப்பட்ட வேலைகள் பூர்த்தி செய்யப்படாததன் விளைவாக அவ் ஒப்பந்ததாரர்களிற்கு ரூபா 1,013,549 மேலதிகக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

| | ஒப்பந்தத்தின் பெயர் | விலைப்பட்டியல்களின் பிரகாரம் செய்யப்பட்ட வேலையின் பெறுமதி | உள்ளபடியாக மேற்கொள்ளப்பட்ட வேலைகளின் பிரகாரம் செய்யப்பட்ட வேலையின் பெறுமதி | மேலதிகக் கொடுப்பனவு தொகை |
|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | திருநகர் வடக்கு கொங்கிறீட் வீதி நிர்மாணம் | 6,912,810 | 6,380,746 | 532,064 |
| (ii) | சோரன்பற்று மத்திய வீதி நிர்மாணம் | 6,434,468 | 6,280,040 | 154,428 |
| (iii) | கனகபுரம் முன்பள்ளி சுற்றுமதில் நிர்மாணம் | 390,712 | 306,419 | 84,293 |
| (iv) | விவேகானந்தநகர் பொது மண்டப சுற்று மதில் நிர்மாணம் | 192,569 | 152,156 | 40,413 |
| (v) | கண்ணகைபுரம் பொது மண்டப நிர்மாணம் | 320,362 | 269,040 | 51,322 |
| (vi) | ஊற்றுப்புலம் பொது மண்டப நிர்மாணம் | 73,920 | 58,559 | 15,361 |
| (vii) | திருவையாறு சுற்றுமதில் நிர்மாணம் | 401,518 | 323,686 | 77,832 |
| (viii) | புதுமுறிப்பு பொது மண்டப சுற்று மதில் நிர்மாணம் | 140,540 | 106,869 | 33,671 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ix) | அக்கராயன்குளம் மண்டப நிர்மாணம் | பொது | 360,760 | 336,595 | 24,165 |
| | **மொத்தம்** | | **15,227,659** | **14,214,110** | **1,013,549** |

## 3.9 நட்டங்களும் சேதங்களும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கில் காட்டப்பட்ட ரூபா 72,841,466 கூட்டுத்தொகையான நட்டங்கள் தொடர்பாக 08 ஆண்டுகளிற்கு மேலாக ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 05 அலுவலக வாகனங்களிற்கு ஏற்பட்ட நட்டங்கள் 2011 ஆம் ஆண்டிலிருந்து ஒதுக்கீட்டுக் கணக்குகளிற்கு மதிப்பிடப்பட்டுக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. மேலும் வாகனமொன்றிற்கு ஏற்பட்ட ரூபா 1,047,800 நட்டம் கடந்த 4 ஆண்டுகளாக ஒதுக்கீட்டுக் கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

## 3.10 தீர்வு காணப்படாத கணக்காய்வுப் பந்திகள்

2014 ஏப்ரல் 08 இல் நடைபெற்ற பொதுக் கணக்குகள் குழுவின் 197 ஆவது கூட்டக் குறிப்பில் உள்ளடக்கப்பட்டு அவற்றின் மீதான பின்தொடர் நடவடிக்கைகள் முடிவுறுத்தப்பட்டிருக்காத மாவட்டச் செயலகத்துடன் தொடர்புடைய பந்திகளிற்கான தொடர்புகள் கீழே தரப்பட்டுள்ளன.

| கூட்டக் குறிப்புக்களுடனான தொடர்பு | | விடயம் |
|---|---|---|
| **ஆண்டு** | **பந்தி இலக்கம்** | |
| 2014 | 10 (iv) | 04 கூட்டுறவுச் சங்கங்களிற்கு செலுத்தப்பட்ட ரூபா 7,050,000 கூட்டுத்தொகையான தீர்க்கப்படாத நிலுவை நெற் கொள்வனவு முற்பணங்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் கடந்த 03 ஆண்டுகளிற்கு மேலாக தாமதமாகியிருந்தது. |

## 3.11 மனித வளங்கள் முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர்களின் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 13 | 10 | 03 |
| (ii) | மூன்றாம் நிலை | 04 | - | 04 |
| (iii) | இரண்டாம் நிலை | 78 | 74 | 04 |

| | | | | |
|---|---|---|---|---|
| (iv) | ஆரம்ப நிலை | 28 | 23 | 05 |
| | | ------- | ------- | ----- |
| | | **123** | **107** | **16** |
| | | ==== | ==== | === |

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் 16 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.